# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாக்குழு

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)
12, இராமானுஜம் தெரு, தி.நகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 98406 00990, 95000 41331

## 2022–ஆம் ஆண்டிற்கான மையப் போட்டிகள் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | LKG | உடையலங்காரப்போட்டி : புராண இதிகாசங்களிலிருந்து ஏதேனும் ஒரு கதாபாத்திரமாக அலங்காரம் செய்து காட்சியளிக்க வேண்டும். |
| 2. | UKG | உடையலங்காரப்போட்டி : புராண இதிகாசங்களிலிருந்து ஏதேனும் ஒரு கதாபாத்திரமாக அலங்காரம் செய்து காட்சியளிக்க வேண்டும். |
| 3. | முதல் வகுப்பு | நீதிப்பாடல்கள் (கொடுக்கப்பட்டுள்ளன) |
| 4. | 2ம் வகுப்பு | நீதிப்பாடல்கள் (கொடுக்கப்பட்டுள்ளன) |
| 5. | 3ம் வகுப்பு | சமயப் பண்பாடு (கொடுக்கப்பட்டுள்ளது) : நடுவர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூற வேண்டும். |
| 6. | 3ம் வகுப்பு | தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் (கொடுக்கப்பட்டுள்ளது) |
| 7. | 4ம் வகுப்பு | தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் (கொடுக்கப்பட்டுள்ளது) |
| 8. | 5ம் வகுப்பு | தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் (கொடுக்கப்பட்டுள்ளது) |
| 9. | 4 & 5ம் வகுப்பு | ஓவியப் போட்டி – ராமாயணம், மகாபாரதம் அல்லது ஏதேனும் ஓர் இறைவனோடு இணைந்த நிகழ்ச்சி – 60 நிமிடங்கள் (ஓவியத்தாள் மட்டும் வழங்கப்படும்) |
| 10. | 6,7,8–ம் வகுப்பு | தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் (கொடுக்கப்பட்டுள்ளது) |
| 11. | 6,7,8–ம் வகுப்பு | பேச்சுப் போட்டி – 5 நிமிடங்கள் – தலைப்பு : நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை |
| 12. | 6,7,8–ம் வகுப்பு | இசைப் போட்டி – ஏதேனும் ஒரு பக்திப் பாடல் – 5 நிமிடங்கள். |
| 13. | 6,7,8–ம் வகுப்பு | வினாடி வினா – எழுதுதல் – கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்திலிருந்து பகுதி I மட்டும். |
| 14. | 9,10,11,12–ம் வகுப்பு | பேச்சுப் போட்டி – தலைப்பு : "தம்பியுடையான் படைக்கஞ்சான்" – 5 நிமிடங்கள் |
| 15. | 9,10,11,12–ம் வகுப்பு | வினாடி வினா – எழுதுதல் – கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்திலிருந்து – (பகுதி I & II முழுமையாக) |
| 16. | 9,10,11,12–ம் வகுப்பு | இசைப்போட்டி – ஏதேனும் ஒரு பக்திப் பாடல் (3 நிமிடங்கள்) |

### போட்டி விதிமுறைகள்

1. **ஒவ்வொரு போட்டியாளரும் பத்து ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். ஒருவரே அவர் வகுப்புக்குரிய எத்தனை போட்டிகளில் வேண்டுமாயினும் பங்கு கொள்ளலாம். மொத்தம் 10 ரூபாய் செலுத்தினால் போதும்.**
2. **பள்ளியின் மூலமாகவோ அல்லது தனியாக நேரடியாகவோ கலந்து கொள்ளலாம். அடையாள அட்டை (ID) கொண்டு வரவேண்டும்.**
3. **இசைப் போட்டிக்கு எந்த வாத்தியத்திற்கும் அனுமதி கிடையாது (சுருதிப்பெட்டி தவிர)**
4. **ஒவ்வொரு போட்டிக்கும் முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளும், ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படும் (சான்றிதழ்களோடு)**
5. **எல்.கே.ஜி., யு.கே.ஜி., 4 & 5ம் வகுப்பு ஓவியம் நீங்கலாக மற்ற 12 போட்டிகளில் மையப் போட்டிகளில் முதல் பரிசு பெற்ற மாணவர்கள் சூப்பர் பைனலில் கலந்து கொள்ள வேண்டும். அதற்கான அடையாள அட்டை முன்னதாக வழங்கப்படும். சூப்பர் பைனல் நடைபெறும் இடமும், தேதியும் பின்னர் அறிவிக்கப்படும். அதில் வெற்றி பெறுபவர்களுக்கு சில்வர் மெடல் வழங்கப்படும்.**
6. **எல்.கே.ஜி., யு.கே.ஜி., போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகள் மட்டுமின்றி எல்லோருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.**

### மையப் பொறுப்பாளர்கள்

**இணைச் செயலாளர்கள் : M.J. துளசிராம் – 98406 00990 / ஓகை நடராஜன் – 95000 41331**

| | |
|---|---|
| **மைலாப்பூர்** | **நிர்மலா ராணி – 99417 55111**<br>**கற்பகவல்லி சுரேஷ் – 98843 47285** |
| **தாம்பரம்** | **திருவரசமூர்த்தி – 98417 65943** |
| **பம்மல்** | **திருவரசமூர்த்தி – 98417 65943** |
| **திருவொற்றியூர்** | **மஹாலஷ்மி – 98417 91039** |
| **மணலி** | **மஹாலஷ்மி – 98417 91039** |
| **வடபழனி** | **வசுமதி சீனிவாசன் – 98848 41897**<br>**நிர்மலா ராணி – 99417 55111** |
| **திருவான்மியூர்** | **திருவரசமூர்த்தி – 98417 65943** |
| **சைதாப்பேட்டை** | **கல்யாணி சிதம்பரம் – 88258 04852**<br>**மேனகா சுப்பிரமணியம் – 90030 90416** |
| **தியாகராயநகர்** | **ருக்மணி – 94458 11985**<br>**நிர்மலா ராணி – 99417 55111** |

**மையம் :**

**போட்டிகள் நடைபெறும் இடம் :**

**தேதி :**

**நேரம் :**

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாக்குழு

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

12, இராமானுஜம் தெரு, தி.நகர், சென்னை - 600 017.

தொலைபேசி : 98406 00990, 95000 41331

## 2022ஆம் ஆண்டிற்கான பொதுப் போட்டிகள் விவரம்

### பொதுப் போட்டிகள் - 2022

(சென்னை நகர் முழுமைக்கும் ஒரே ஒரு இடத்தில் நடைபெறும்)

### மையப் பொறுப்பாளர்கள்

**இணைச் செயலாளர்கள் : M.J. துளசிராம் - 98406 00990 / ஓகை நடராஜன் - 95000 41331**

| | | | |
|---|---|---|---|
| [illegible]ப்பூர் | நிர்மலா ராணி - 99417 55111<br>கற்பகவல்லி சுரேஷ் - 98843 47285 | வடபழனி | வசுமதி சீனிவாசன் - 98848 41897<br>நிர்மலா ராணி - 99417 55111 |
| தாம்பரம் | திருவரசமூர்த்தி - 98417 65943 | திருவான்மியூர் | திருவரசமூர்த்தி - 98417 65943 |
| பம்மல் | திருவரசமூர்த்தி - 98417 65943 | சைதாப்பேட்டை | கல்யாணி சிதம்பரம் - 88258 04852<br>மேனகா சுப்பிரமணியம் - 90030 90416 |
| திருவொற்றியூர் | மஹாலஷ்மி - 98417 91039 | | |
| மணலி | மஹாலஷ்மி - 98417 91039 | தியாகராயநகர் | ருக்மணி - 94458 11985<br>நிர்மலா ராணி - 99417 55111 |

**பொதுப் போட்டிகள் நடைபெறும் இடம் :**

தேதி :

நேரம் : **காலை 9.00 - மாலை 4.00 மணி**

நாடகப் போட்டி மட்டும் மதியம் 1.30 மணிக்கு நடைபெறும். மற்ற போட்டிகள் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

1. கோலாட்டம் அல்லது கும்மி ஜுனியர் : 5,6,7 மற்றும் 8ஆம் வகுப்பு (மாணவியர்க்கு மட்டும்) குறைந்தபட்சம் 6 பேர். அதிகபட்சம் 10 பேர் ஒரு பள்ளியிலிருந்து ஒரு குழு அல்லது இரண்டு குழுக்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். பக்தி பாடல்கள், தேசப்பற்று பாடல்கள், நாட்டுப்புற, தெம்மாங்கு பாடல்கள், எம்மொழியாயினும் சரி. திரைப்படப் பாடலுக்கு அனுமதியில்லை. 5 நிமிடங்கள் முதல் 7 நிமிடங்கள் வரை.
2. கோலாட்டம் அல்லது கும்மி சீனியர் : 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு (மாணவியர்க்கு மட்டும்) குறைந்தபட்சம் 6 பேர். அதிகபட்சம் 10 பேர் ஒரு பள்ளியிலிருந்து ஒரு குழு அல்லது இரண்டு குழுக்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். பக்தி பாடல்கள், தேசப்பற்று பாடல்கள், நாட்டுப்புற, தெம்மாங்கு பாடல்கள், எம்மொழியாயினும் சரி. திரைப்படப் பாடலுக்கு அனுமதியில்லை. 5 நிமிடங்கள் முதல் 7 நிமிடங்கள் வரை.
3. ரங்கோலி : மாணவியர்க்கு மட்டும் - அனைத்து வகுப்புகளுக்கும் பொது, தனியாகவோ அல்லது ஜோடியாகவோ கலந்து கொள்ளலாம். புராண, இதிகாச காட்சிகளுள் ஒன்றை வண்ணக் கோலமிட வேண்டும். 60 நிமிடங்கள்.
4. யோகாசனம் ஆண்கள் : ஜுனியர் 4,5,6,7ஆம் வகுப்பு வரை
5. யோகாசனம் ஆண்கள் : சீனியர் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை
6. யோகாசனம் பெண்கள் : ஜுனியர் 4,5,6,7ஆம் வகுப்பு வரை
7. யோகாசனம் பெண்கள் : சீனியர் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை

   ஆசனங்கள் : பத்மாசனம், புஜங்காசனம், தனுராசனம், வஜ்ராசனம், திரிகோணாசனம், பஸ்சிமோத்தாசனம், மயூராசனம், ஹலாசனம் ஆகியவை.
8. நாடகம் : சீனியர் 9 - 12ஆம் வகுப்பு - தலைப்பு :: "அவனன்றி ஓர் அணுவும் அசையாது". சிறப்பு உடை, அணிகலன்கள், ஒப்பனை தேவையில்லை.

   இரு பாலருக்கும் பொது. அதிகபட்சம் 8 பேர். 15 நிமிடங்களுக்கு மிகாமல்

### போட்டி விதிமுறைகள் - பொதுப் போட்டிகள்

1. ஒவ்வொரு போட்டியாளரும் பத்து ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். எத்தனை போட்டிகளில் வேண்டுமாயினும் கலந்து கொள்ளலாம். மொத்தம் பத்து ரூபாய் செலுத்தினால் போதும்.
2. பள்ளியின் மூலமாகவோ அல்லது தனியாக நேரடியாகவோ கலந்து கொள்ளலாம்.
3. ஒவ்வொரு போட்டிக்கும் முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகளும், ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படும்.

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

## முதல் வகுப்புக்கான
## ஒப்புவித்தல் போட்டி

## செந்தில் ஆண்டவர் போற்றி

ஓம் அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி

ஓம் அழகு வள்ளி மணாளனே போற்றி

ஓம் அறு பொறியில் உதித்தாய் போற்றி

ஓம் அடியவர் குறை தீர்ப்பாய் போற்றி

ஓம் அழகிய மால் மருகோனே போற்றி

ஓம் அகத்தியர்க்கு தமிழ் தந்தோய் போற்றி

ஓம் அரு உருவானாய் போற்றி

ஓம் அருணாச்சல சிவமே போற்றி

ஓம் அறு கோணச் சக்கரமே போற்றி

ஓம் அண்ட பிண்டமானாய் போற்றி

ஓம் ஆனை முகத்தோன் சோதரா போற்றி

ஓம் ஆவினன்குடி அமர்ந்தோய் போற்றி

ஓம் அறுபடை வீடமர்ந்தாய் போற்றி

ஓம் ஆறுமுகப்பெருமானே போற்றி

ஓம் இடும்பனுக்கருளினாய் போற்றி

ஓம் இகபர சுகம் தருவோய் போற்றி

ஓம் இந்திரன் மருகோனே போற்றி

ஓம் இடர் எல்லாம் களைவாய் போற்றி

ஓம் இனிமை, இளமை ஆனாய் போற்றி

ஓம் ஈடு இணையில்லாதவனே போற்றி

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

## இரண்டாம் வகுப்புக்கான
## ஒப்புவித்தல் போட்டி



## திருநீற்றுப் பதிகம்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே!

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே!

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே!

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே!

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம் ஆவது நீறு
தேசம் புகழ்வது நூறு திரு ஆலவாயான் திருநீறே!

அருத்தம் ஆவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் ஆவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகைசூழ்ந்த திருஆலவாயான் திருநீறே!

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம் ஆவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே!

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

## இரண்டாம் வகுப்புக்கான
## ஒப்புவித்தல் போட்டி



# திருநீற்றுப் பதிகம்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே!

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத்தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல் வயல் சூழ்ந்த திரு ஆலவாயான் திருநீறே!

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே!

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே!

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம் ஆவது நீறு
தேசம் புகழ்வது நூறு திரு ஆலவாயான் திருநீறே!

அருத்தம் ஆவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் ஆவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகைசூழ்ந்த திருஆலவாயான் திருநீறே!

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியம் ஆவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம் ஆவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே!

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

## மூன்றாம் வகுப்புக்கான சமயப் பண்பாடு

### 1.சமய சின்னங்கள்

சமய சின்னம் என்பது நாம் எந்த சமயத்தை சார்ந்தவர் என்பதை காட்டுவது. அதோடு நம் வாழ்வைப்பற்றிய கண்ணோட்டத்தையும் காட்டுவது தான் சமய சின்னம். எனவே ஒவ்வொருவரும் சமயசின்னத்தை கண்டிப்பாக அணிய வேண்டும். நமது சமயத்தில் உள்ள சமய சின்னங்கள் சில

1. விபூதி (திருநீறு- பசுஞ்சாணத்தில் தயார் செய்யப்படுவது)
2. குங்குமம் (குடமஞ்சளில் தயார் செய்யப்படுவது)
3. சந்தனம் 4.திருமண் 5. ருத்திராட்சம் 6. துளசிமணி 7.காவிக்கொடி 8.ஓம் 9.ஸ்வஸ்திக்

### 2. பண்பாட்டு உடைகள்

நமது பாரத நாடு பண்பாடு மற்றும் நாகரிகத்தில் சிறந்து விளங்குகின்ற நாடு. தற்போது சினிமா, டிவி என பலவற்றை பார்த்து மக்கள் மயங்கி உணவு முறையிலும், உடையிலும் நம் நாட்டு பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதில் தயக்கம் காட்டுகின்றனர்.

நம்மைப் பார்த்தால் தெய்வீக எண்ணம் வரும் விதமாக உடை அணிய வேண்டும் என்று நம் பெரியோர்கள் நமக்கு கூறியுள்ளனர். எனவே அரைகுறை ஆடைகளை தவிர்த்து, நல்ல உடைகளை அணிய வேண்டும். நம் பெற்றோர் அரைகுறை ஆடை வாங்கித் தந்தால் நாம் அதை அணியக் கூடாது. எனக்கு நம் பண்பாட்டோடு கூடிய ஆடைகளை வாங்கித் தாருங்கள் எனக்கேட்டு அவற்றை அணிந்து, நம் பண்பாட்டை நாம் பாதுகாக்க வேண்டும்.

உடலை அழுத்துகின்ற இறுக்கமான ஆடைகள் ஆரோக்கியத்திற்கு கேடு. தளர்வான ஆடைகளை அணிவதே நம்நாட்டு தட்பவெப்ப நிலைக்கு ஏற்றது.

## 3.ஆலய வழிபாட்டு முறை

1. ஆலயத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும்?

உடல் தூய்மையுடனும் (புறத்தூய்மை), அகத்தூய்மையுடனும் சமயச்சின்னங்கள் (திருநீறு, குங்குமம், சந்தனம், திருமண்) போன்றவற்றை அணிந்து, இறைநாமத்தை மனத்திற்குள் சொல்லிக் கொண்டே ஆலயத்திற்கு செல்ல வேண்டும்.

2. கோபுரத்தை கண்டதும் எப்படி வணங்க வேண்டும்?

கோபுரத்தை கண்டதும் இரண்டு கரங்களையும் தலைக்குமேல் குவித்து மூல மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு கோபுரத்தை ஸ்தூல லிங்கமாக எண்ணி வணங்க வேண்டும்.

3. கொடி மரத்தை எவ்வாறு வணங்க வேண்டும்?

கொடி மரத்தின் பக்கத்தில் சென்றதும் ஆண்கள் சாஷ்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

4.பஞ்ச நமஸ்காரம், அஷ்டாங்க நமஸ்காரம் என்பது யாது?

பஞ்ச நமஸ்காரம் என்பது தலை, கைகளிரண்டு, முழங்கால் இரண்டு ஆகிய ஐந்து அங்கங்களும் பூமியில் படும்படியாக வணங்குவது ஆகும்.

தலை, செவியிரண்டு, கையிரண்டு, புஜங்களிரண்டு, முகவாய்கட்டை ஆகிய எட்டு அங்கங்களும் பூமியில் படும்படியாக வணங்குவது அஷ்டாங்க நமஸ்காரம் ஆகும்.

5.கன்னி மூலையில் விநாயகரை எவ்வாறு வணங்க வேண்டும்?

வலக்கையை இடக்கையின் முன்வைத்து வலக்கையால் இடக்காதையும் இடக்கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டு 3 முறை தோப்புக்கரணமிட்டு விநாயகர் தோத்திரம் கூறி வணங்க வேண்டும்.

6.கோவிலை சுற்றுவது எப்படி?

விநாயகரை வழிபட்டுவிட்டு வலது பக்கமாக வேகமாக ஓடுவது போல் அவசரஅவசரமாக இல்லாமல் மெதுவாக நடந்தபடி சுற்ற வேண்டும். பிரகாரங்கள் இருந்தால் முதலில் வெளிபிரகாரம் அடுத்து அதற்கு உள் உள்ள பிரகாரம் என ஒவ்வொன்றாக சுற்ற வேண்டும்.

7.துவார பாலகர்களை எவ்வாறு வணங்க வேண்டும்?

துவாரபாலகர்களின் முன் சென்று அடியேன் உள்ளே சென்று இறைவனை வணங்குவதற்கு அனுமதி தந்தருளுங்கள் என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

8.மூலஸ்தானம் சென்று கடவுளை எப்படி வணங்கவேண்டும்?

மூலஸ்தானம் சென்று இறைவனை வணங்கி தோத்திர பாடல்கள் பாடுதல் வேண்டும். தேங்காய் பழம் முதலிய நிவேதனப் பொருள்களையும் கொடுத்து அர்ச்சனையும் செய்விக்கலாம். கற்பூர தரிசனம் செய்து பிரசாதம் வாங்கி தரித்துக் கொண்டு மூலஸ்தான மூர்த்தியை நன்றாய் மனதில் பதிய வைத்து கசிந்துருகி துதித்து வெளிவரல் வேண்டும். பின் அம்பிகை சன்னதியிலும் அவ்வாறே வணங்குதல் வேண்டும்.

9.கோவில் வழிபாடு அனைத்தும் முடிந்த பிறகு என்ன செய்ய வேண்டும்?

.கோவில் வழிபாடு அனைத்தும் முடிந்த பிறகு கொடிமரத்திற்கு சற்று தூரத்தில் வடக்கு நோக்கியோ அல்லது கிழக்கு நோக்கியோ விலகியிருந்து அமர்ந்து மூலமந்திரத்தை 108 முறை ஜபித்து நாம் கண்ட இறைவன் திருவுருவத்தை மனதிற்குள் எண்ணி தியானம் செய்துவிட்டு வெளியில் வரவேண்டும்.

10. கோவிலில் செய்யக்கூடாதவை எவை?

- கோவிலில் கிடைக்கும் தீர்த்தத்தை கீழேவிடக்கூடாது (இறைவன் நினைவுடன் பருகவேண்டும்)
- இறைவனுடைய வாகனங்களுக்கும் மூலஸ்தானத்திற்கும் குறுக்கே நடக்கக்கூடாது.

- ஆலயங்கள் நம் பொதுசொத்து. அதனை சுத்தமாகவும் பக்தியுடனும் பராமரிப்பது நம் கடமை. ஆலயத்தினுள் அசுத்தம் செய்யக்கூடாது. சுவரில் சூலம், வேல் போன்ற படம் வரைதல், தங்களுடைய பெயர்களை எழுதுதல், விபூதி குங்கும பிரசாதங்களை சுவரில் தட்டுதல் முதலியன செய்யக்கூடாது.

- கோவிலில் மூலவரைக்காண மெதுவாக செல்ல வேண்டும் முண்டியடித்துக்கொண்டு செல்வது கூடாது.

- கோவில் தரிசனம் செய்ய வருவோருக்கு எவ்வித இடைஞ்சலும் தரக்கூடாது.

- இறைவன் திருமுன்பு அனைவரும் சமம் எனவே சொந்த கௌரவத்தைக்காட்டி சலுகைகள் பெறுதல் அறவே கூடாது.

- இறைவன் பாடல்களை பாடி வழிபடும்போது அடுத்தவர் வணங்குவதற்கு இடையூறாக இல்லாமல் பாடிவழிபட வேண்டும்.

- கோவிலினுள்ளே இறைவன் புகழ்பாடுவது அல்லாமல் நம் சொந்தக் கதை, ஊர்க்கதைகளை பேசக்கூடாது.

*****

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

## மூன்றாம் வகுப்புக்கான
## தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் போட்டி



### உலகநீதி (உலகநாதர்)

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே!

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒரு நாளும் பழக வேண்டாம்
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே!

மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல் வழி சேர வேண்டாம்
வனந்தேடுங் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளைவாழ்த்தாய் நெஞ்சே!

வார்த்தை சொல்வார் வாய்பார்த்து திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்.
மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்த்த புகழாளனொரு வள்ளிபங்கன்
திருக்கைவே லாயுதனை செப்பாய் நெஞ்சே!

சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்ந்நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்
ஊரோடு குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தை தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டு துணைபேசித் திரிய வேண்டாம்
வாராருங் குறவருடை வள்ளிபங்கன்
மயிவேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே!

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)



## நான்காம் வகுப்புக்கான
## தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் போட்டி

1. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டு கொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!

– சிவபெருமான் திருப்பள்ளியெழுச்சி, மாணிக்கவாசகர்

2. கன்னிதுர்க்கையே இதயக்கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெயதுர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவிதுர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

– ராகு கால துர்க்கா அஷ்டகம்

3. காசினி இருளை நீக்கும் கதிரொளியாகி எங்கும்
பூசனை உலகோர் ஏத்த புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசி ஏழுடையதேர் மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா எனை ரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி

– சூரிய நமஸ்காரம்

4. அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும், உடையாய், பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய், இவளை
இறையார் வளைகொண்டு எழில் வவ்வினையே

- சர்ப்பதோஷம் நீங்க பதிகம்

5. நின்றும் இருந்தும், கிடந்தும், நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமரையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே!

- அபிராமி அந்தாதி

6. ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டு போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு

- ஔவையார்

7. வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோகியவா!
அழ அந்தம் இலா அயில்வேல் அரசே!
மிழ என்று ஒரு பாவி வெளிப்படினே.

- கந்தர் அநுபூதி - அருணகிரிநாதர்

8. பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் - கச்சைத்
திருவரையும், சீறடியும், செங்கையும் ஈராறு
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்

- கந்தர்கலி வெண்பா - குமரகுருபரர்

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

## ஐந்தாம் வகுப்புக்கான
## தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் போட்டி



கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கன இருள் அகன்றது காலையம் பொழுதாய்,
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவர் அரசர்கள் வந்துவந்தீண்டி,
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற்றீட்டமும் பிடியொருமுரசும்,
அதிர்தலில் அலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா! பள்ளி எழுந்தருளாயே!

– மகாவிஷ்ணு திருப்பள்ளியெழுச்சி
தொண்டரடிப் பொழயாழ்வார்

விண்ணவர் தொழுது ஏத்தி நின்றானை,
வேதம்தான் விரித்து ஓத வல்லானை
நண்ணினார்க்கு என்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண் இல் தொல் புகழாள் உமை நங்கை
என்றும் ஏந்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்று உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே!

– கண் கோளாறு நீங்க பதிகம்

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே!
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே!
வாசமலரெலாம் ஆனாய் நீயே!
மலையான் மருகனாய் நின்றாய் நீயே!
பேசப் பெரிதும் இனியாய் நீயே!
பிரானாய் அடி என்மேல் வைத்தாய் நீயே!
தேசவிளக்கெலாம் ஆனாய் நீயே!
திருவையாறு அகலாத செம்பொற்சோதீ!

– திருத்தாண்டகம் – திருநாவுக்கரசர்.

நீரில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் - பாரில்
உடன் பிறப்பில்லா உடம்பு பாழ் பாழே
மடக்கொடியில்லா மனை - ஔவையார்

வருவாய் மயில் மீதினிலே
வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும்
அடியார் பலரிங்கு உளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே! அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே! - பாரதியார்

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதி மணிவிளக்கே ஸ்ரீதேவிப் பொன்மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காந்தி விளக்கே காமாட்சி தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சுத்திரிபோட்டு
குளம்போல எண்ணெய்விட்டு கோலமுடன் ஏற்றி வைத்தேன்
ஏற்றினேன் திருவிளக்கு எந்தன் குடிவிளங்க!

- திருவிளக்கு பதிகம்

நெஞ்சில் கவலையெல்லாம் நிழல்போல தொடர்ந்ததனால்
தஞ்சமென உனையடைந்தேன் தாமரைமேல் நிற்பவளே
அஞ்சாது வரம் கொடுக்கும் அழகு மகாலட்சுமியே!
வஞ்சமிலாது எனக்கருள வருவாய் இது சமயம்.
ஏழுவித லட்சுமிகள் என்னில்லம் வந்தாலும்
சூழுகின்ற பகையொழிக்கும் தூயவளும் நீதானே!
வாழும் வழி காட்டிடவே வாவீரலட்சுமியே!
மாலையிட்டு போற்றுகிறேன். வருவாய் இது சமயம்!

- அஷ்டலட்சுமி வருகைப்பதிகம்

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)



## 6, 7 மற்றும் 8ஆம் வகுப்புக்கான
## தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் போட்டி

மானாட மழு ஆட மதிஆட புனல் ஆட
மங்கை சிவகாமி ஆட மால் ஆட நூல் ஆட
மறை ஆடத்திறை ஆட மறைதந்தபிரம்மன் ஆட
கோன் ஆட வானுலகக் கூட்டம் எல்லாம் ஆட
குஞ்சரமுகத்தாள் ஆட குண்டலம் இரண்டும் ஆட
தண்டைபுலி உடை ஆட குழந்தை முருகேசன் ஆட
ஞானசம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி அட்ட பாலகரும் ஆட
நரை தும்பை அறுகு ஆட நந்திவாகனம் ஆட
நாட்டியப் பெண்கள் ஆட வினை ஓட உனைப்பாட
எனை நாடி இது வேளை விருதோடு ஆட வருவாய்
ஈசனே சிவகாமிநேசனே எனை ஈன்ற தில்லை வாழ்நடராஜனே!

– நடராஜப்பத்து

அன்றிவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம். இரங்கேலோ ரெம்பாவாய்

– திருப்பாவை – ஆண்டாள்

மருவார் புறமூன்றும் எய்தாய் போற்றி!
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி!
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி!
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி!
திருவாகி நின்ற திறமே போற்றி!
தேசம் பரவப்படுவாய் போற்றி!
கருவாகி ஓடும் முகிலே போற்றி!
கயிலை மலையானே போற்றி போற்றி!

– போற்றித் திருத்தாண்டகம் – திருநாவுக்கரசர்

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையாறொலியொத்த விதால்
நிலையற்றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற்ற சைவற்ற நுபூதி பெறும்
அடியார் முடிவாழ்வைடூர்யமே!
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிக்கையே!

– லலிதா நவரத்ன மாலை

உருவளர் பவளமேனி ஒளி நீரணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியோர் அவர்க்கு மிகவே

– கோளறு பதிகம் – திருஞானசம்பந்தர்

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே

– அபிராமி அந்தாதி

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங்காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

– திருவாசகம் – மாணிக்கவாசகர்

என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்ததில்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்ட பின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காணவல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே

– சிவவாக்கியார்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தன் என்று என்றுற்று உனை நாளும்
கண்டு கொண்டு அன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வேனோ
சங்கரன் பங்கிற் சிவை பாலா
செந்திலங்கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே!

– திருப்புகழ் – அருணகிரிநாதர்



# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா 2022

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

## 6, 7 மற்றும் 8ஆம் வகுப்புக்கான
## தமிழ் செய்யுள் ஒப்புவித்தல் போட்டி.

மானாட மழு ஆட மதிஆட புனல் ஆட
மங்கை சிவகாமி ஆட மால் ஆட நூல் ஆட
மறை ஆடத்திறை ஆட மறைதந்தபிரம்மன் ஆட
கோன் ஆட வானுலகக் கூட்டம் எல்லாம் ஆட
குஞ்சரமுகத்தாள் ஆட குண்டலம் இரண்டும் ஆட
தண்டைபுலி உடை ஆட குழந்தை முருகேசன் ஆட
ஞானசம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி அட்ட பாலகரும் ஆட
நரை தும்பை அறுகு ஆட நந்திவாகனம் ஆட
நாட்டியப் பெண்கள் ஆட வினை ஓட உனைப்பாட
எனை நாடி இது வேளை விருதோடு ஆட வருவாய்
ஈசனே சிவகாமிநேசனே எனை ஈன்ற தில்லை வாழ்நடராஜனே!

– நடராஜப்பத்து

அன்றிவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம். இரங்கேலோ ரெம்பாவாய்

– திருப்பாவை – ஆண்டாள்

மருவார் புறமூன்றும் எய்தாய் போற்றி!
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி!
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி!
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி!
திருவாகி நின்ற திறமே போற்றி!
தேசம் பரவப்படுவாய் போற்றி!
கருவாகி ஓடும் முகிலே போற்றி!
கயிலை மலையானே போற்றி போற்றி!

– போற்றித் திருத்தாண்டகம் – திருநாவுக்கரசர்

வலையொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையாறொலியொத்த விதால்
நிலையற்றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற்ற சைவற்ற நுபூதி பெறும்
அடியார் முடிவாழ்வைடூர்யமே!
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிக்கையே!

– லலிதா நவரத்ன மாலை

உருவளர் பவளமேனி ஒளி நீரணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியோர் அவர்க்கு மிகவே

– கோளறு பதிகம் – திருஞானசம்பந்தர்

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கே பரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனது என்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே

– அபிராமி அந்தாதி

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங்காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

– திருவாசகம் – மாணிக்கவாசகர்

என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்ததில்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்ட பின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காணவல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே

– சிவவாக்கியார்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தன் என்று என்றுற்று உனை நாளும்
கண்டு கொண்டு அன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வேனோ
சங்கரன் பங்கிற் சிவை பாலா
செந்திலங்கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே!

– திருப்புகழ் – அருணகிரிநாதர்

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா

# 2022

**6, 7, 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கான**
**வினாடி வினா – பகுதி I மட்டும்**

**9, 10, 11, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான**
**வினாடி வினா பகுதி I & II முழுமையாக**




## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழாக்குழு

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

12, இராமானுஜம் தெரு, தி. நகர், சென்னை – 600 017.
**தொலைபேசி : 98406 00990**

## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா

# விழாக்குழு

(அமைப்பு : விசுவ ஹிந்து பரிஷத்)

தலைவர் :

திரு. **S. கணபதி,** IPS (ஓய்வு)

கௌரவ தலைவர் :

திரு. **S. சுவாமிநாதன்,** F.C.A

உப தலைவர் :

திருமதி. **கீதா ராஜசேகரன்**

செயலாளர் :

திரு. **V.C. கிருஷ்ணன்,** FCA

இணைச் செயலாளர்கள் :

திரு. **M.J. துளசிராம்,** B.Sc.,

திரு. **ஓகை நடராஜன்,** B.E.,

பொருளாளர் :

திரு. **M. மீனாட்சி சுந்தரம்,** B.Com.,



## பகுதி - I

1. நமசிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க! எந்த நூல்? யார் ஆசிரியர்?
**சிவபுராணம் – மாணிக்கவாசகர்**

2. விநாயகரின் ஐந்து கரங்கள் யாவை?
**எழுத்தாணி ஏந்திய கரம் – படைத்தல்**
**மோதகம் ஏந்திய கரம் – காத்தல்**
**அங்குசம் ஏந்திய கரம் – அழித்தல்**
**பாசம் ஏந்திய கரம் – மறைத்தல்**
**துதிக்கை – அருளல்**

3. அழகிய ஜோதியான சக்தி எவ்வாறு அழைக்கப்படுகிறாள்?
**அமரி, குமரி, கவுரி, சமரி, சூலி, நீலி**

4. உருவாய், அருள்வாய், உளதாய், இலதாய் – எந்த நூல்? ஆசிரியர் யார்?
**கந்தர் அனுபூதி – அருணகிரி நாதர்**

5. திருவிளக்கு பூஜையை பரப்பியதில் பெரும் பங்கு இவருக்கு. யார் அவர்?
**சுவாமி மதுரானந்தர்**

6. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள் – நூல் எது? ஆசிரியர் யார்?
**திருப்பாவை – ஆண்டாள்**

7. இறைவனை உணரும் நான்கு யோகங்கள் யாவை?
**கர்மயோகம், பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம்**

8. திருமுறைகள் பாடியவர்களில் ஏதேனும் நால்வரது பெயர் குறிப்பிடுக?
**சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேந்தனார், சேக்கிழார், சேரமான் பெருமாள் நாயனார்.**

9. திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா, திருச்செந்தூர் அகவல் இவற்றின் ஆசிரியர்கள் யாவர்?
**முறையே நக்கீரர், குமரகுருபரர், திருச்சிற்றம்பல நாடிகள்.**

10. சிங்க வாகனத்தையுடைய ராஜராஜேஸ்வரி தனது கரங்களில் எவற்றை ஏந்தியுள்ளார்?
**பாசம், அங்குசம், கரும்புவில், பூ**

11. புராணங்களை இயற்றியவர் யார்? நான்கினைக் கூறு
**வேதவியாசர் 1) பாகவத புராணம், 2) மத்ஸ்ய புராணம் 3) பவிஷ்யத் புராணம், 4) பிரம்ம வைவர்த்த புராணம்.**

12. இந்து சமயத்திற்குரிய ஒழுக்க நெறிகள் யாவை?
**மாதா, பிதா, குருவை வணங்குதல், தெய்வ பக்தி, அகிம்சை, ஐம்புலனடக்கம்**

13. துருவனின் பெற்றோர் பெயரென்ன?
**உத்தான பாதர், சுநீதி**

14. மார்க்கண்டேயனின் பெற்றோர் பெயரென்ன?
**மிருகண்டு ரிஷி, மருத்துவதி அம்மையார்**

15. கிருஷ்ண பரமாத்மா அவதரித்த நாள் எது?
**ஆவணி மாதம், கிருஷ்ண பட்சம், அஷ்டமி நள்ளிரவில், கம்சனின் சிறைச் சாலையில் அவதரித்தார்.**

16. முருகப்பெருமான் அழித்த சூரபத்மன் எந்த நாட்டை ஆண்டு வந்தான்?
**விந்தமலைச் சாரலில் உள்ள மாயாபுரம்**

17. 63 நாயன்மார்களில் எவரேனும் நால்வர் பெயரைக் கூறு?
**இளையான் குடி மாறனார், ஏயர்கோன் கலிக்காமர், பெருமிழலைக் குறும்பர், நின்றசீர் நெடுமாறன்.**

18. ராஜராஜ சோழனின் சிறப்பு பெயர்கள் யாவை?
**சிவபாத சேகரன், நிகரிலி சோழன், திருமுறை கண்ட சோழன்**

19. பிரதி பலன் எதிர்பாராது செய்யும் செயலுக்கு என்ன பெயர்?
**நிர்காமிய கர்மம்**

20. கீழ்க்கண்ட வைணவத் தலங்களின் இன்றைய பெயரென்ன?
திருக்கடித்தானம், திருச்சிற்றம்பலம்
**முறையே கொட்டாரக்கரா, சிதம்பரம்**

21. அமர்நாத் செல்லும் வழியில் உள்ள முக்கிய இடங்கள் யாவை?
**சந்தன்வாடி, சேஷநாக், மகாகுணஸ், பஞ்சதரணி**

22. சேக்கிழார் பிறந்த ஊர் எது? பெற்றோர் யாவர்?
**குன்றத்தூர், வெள்ளியங்கிரியார், அழகாம்பிகை**

23. பெரியாழ்வாரின் இயற்பெயரென்ன? பெற்றோர் யாவர்?
**விஷ்ணு சித்தர், முகுந்தாச்சாரியார், பதுமையார்**

24. மதுரகவியாழ்வார், நம்மாழ்வார் மீது பாடிய பாசுரம் எது?
**கண்ணி நுண் சிறுத்தாம்பு**

25. நிஷ்டை என்றால் என்ன?
**ஒரு முகப்பட்ட ஈடுபாடு**

26. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களை வரிசைப்படுத்துக.
**சூழ்ச்சி, சூதாட்டம், அடிமை, துகிலுரிதல், சபதம்**

27. கிருஷ்ணர் – ருக்மணியின் முதல் புதல்வர் யார்? அவர் யாருடைய அவதாரம்?
**பிரத்யும்னர். இவர் மன்மதனின் அவதாரம்**

28. குற்றால நாதர் கோயிலில் அருள்புரியும் அம்மன் யார்?
**குழல்வாய் மொழி நாயகி**



29. இராமலட்சுமணர் எவரது அம்பினால் மூர்ச்சையடைந்தனர்? அந்த அஸ்திரத்தின் பெயர் என்ன?
**இந்திரஜித் – பிரம்மாஸ்திரம்**

30. வைகுண்ட லோக வாயிற் காவலர்கள் ஜெயன், விஜயன் தாம் பெற்ற சாபத்தால் மூன்று பிறவிகள் எடுத்தனர். முதல் பிறவியில் யாராக?
**ஹிரண்யாட்சன், ஹிரண்யகசிபு**

31. இரண்டாவது பிறவியில் யாராக?
**இராவணன், கும்பகர்ணன்**

32. மூன்றாவது பிறவியில் யாராக?
**சிசுபாலன், தண்டவக்ரன்**

33. பாண்டவர்கள் பிறந்த வனத்தின் பெயர் என்ன?
**சதஸ்ருங்க வனம்**

34. மாணிக்க வாசகருக்கு தனி சந்நிதி உள்ள கோயில்கள் எவை?
**1) ஆவுடையார் கோவில், 2) திருவாதவூர், 3) சின்னமனூர், 4) உத்தரகோச மங்கை, 5) சிதம்பரம்**

35. திபெத் நாட்டில் சரஸ்வதிக்கு என்ன பெயர்?
**யங்சன்ம**

36. பூலோக கைலாசம் என அழைக்கப்படும் தலங்கள் யாவை?
**திருவையாறு, திருக்குற்றாலம், சிதம்பரம்**

37. காசிக்கு வாசி உயர்ந்த தலங்கள் யாவை?
**திருமுதுக்குன்றம் (விருத்தாச்சலம்), திருஆலவாய் (மதுரை)**

38. தட்சிணகைலாயம் எனப்படும் தலங்கள் எவை?
**திருக்காளத்தி, திருச்சி, திரிகோணமலை (இலங்கை)**

39. அம்பிகையின் ஆட்சித் தலங்கள் யாவை?
**காஞ்சி, மதுரை, காசி, நாகை நீலாயதாட்சி**

40. பன்னிரண்டு ராசிக்காரர்களுக்கான ஆலயங்களுள் ஏதேனும் நான்கினை கூறு
**மீனம் – வைத்தீஸ்வரன் கோயில், கும்பம் – தேவிப்பட்டினம்
சிம்மம் – ஸ்ரீவாஞ்சியம், தனுசு – மயிலாடுதுறை**

41. 27 நட்சத்திரங்களில் ஏதேனும் ஐந்தின் அதிதேவதைகளை குறிப்பிடுக.
**1) ஆயில்யம் – ஆதிசேஷன், 2) பூசம் – பிரகஸ்பதி
3) சித்திரை – விஸ்வகர்மா 4) மிருகசீரிஷம் – சந்திரன்
5) மகம் – சுக்கிரன்**

42. 12 ஜோதிர் லிங்கங்களில் ஏதேனும் மூன்றினைக் கூறு?
**1) மகாகாளர் – உஜ்ஜயினி, 2) திரியம்பகம் – நாசிக் பஞ்சவடி அருகே, 3) மல்லிகார்ச்சுனர் – ஸ்ரீசைலம் அருகே**

43. சித்தாந்த சைவம் பரம்பொருளை எவ்வாறு வழிபடச் சொல்கிறது?
**உருவமாக, அருவமாக, அருவுருவமாக, அதீதமாக**

44. வில், அம்பு இல்லாத ராமர் சிலை உள்ள தலம் எது?
**நெடுங்குன்றம்**

45. நாவுக்கரசரை 'அப்பர்' என்று ஞானசம்பந்தர் அழைத்த தலம் எது?
**திருப்பாதிரிப்புலியூர்**

46. போதைப் பழக்கத்திலிருந்து விடுபட பிரார்த்தனை செய்யும் தலம் எது?
**மஞ்சக்கம்பை - மானிஹாடா ஹெத்தையம்மன், நாகராஜர்**

47. ஆஞ்சநேயரின் பத்து கைகளில் ஆயுதம், நெற்றிக்கண் – எந்த தலம்?
**அனந்த மங்கலம் - தசபுஜவீர ஆஞ்சநேயர்**

48. திவ்யதேசம், பஞ்சரங்க தலம், காவிரி ஸ்நானம், ஏகாதசி கோயில் எது?
**திருஇந்தளூர் - பரிமள ரங்கநாதர்**

49. 1) அன்புகாட்டு – ஆனால்... 2) இரக்கம் காட்டு – ஆனால்.... 3) பணிவாய் இரு ஆனால்.... 4) கண்டிப்பாக இரு – ஆனால் ........ பூர்த்தி செய்க
**முறையே 1) அடிமையாய் இராதே, 2) ஏமாந்து போகாதே, 3) கோழையாய் இராதே, 4)கோபம் கொள்ளாதே**

50. இந்துக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில விரதங்களைக் கூறு
**1) கந்தர் சஷ்டி விரதம், 2) சிவராத்திரி விரதம், 3) ஏகாதசி விரதம், 4) பிரதோஷ விரதம்.**

51. பஞ்சாட்சர மந்திரம் எது? சடாட்சர மந்திரம் எது? அஷ்டாட்சர மந்திரம் எது?
**நமசிவாய, சரவண பவ, ஓம் நமோ நாராயணாய**

52. பாரதத்தின் 4 எல்லைகளில் பகவான் சங்கரர் நிறுவிய மடங்கள் யாவை?
**வடக்கில் பத்ரிநாத், மேற்கில் துவாரகை, கிழக்கில் பூரி ஜகன்னாதம், தெற்கில் சிருங்கேரி**

53. திருமுறையில் பட்டினத்தாரின் பங்கு என்ன?
**கோயில் நான்மணி மாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை...**

54. இந்துக் கோயில்களில் ஆரவாரம் மிகுந்துதான் இருக்கும் எவ்வாறு?
**மேளவாத்தியம், அர்ச்சனை, பாட்டு, நிருத்யம், பூஜா மணியோசை, அதிர்வேட்டு, சுலோகம், ஜபம்...**

55. தென் மாநிலங்களில் சரஸ்வதிக்குரிய வாகனம் எது?
**மயில்; வர்ஷவாஹினி**

56. வடமாநிலங்களில் சரஸ்வதிக்குரிய வாகனம் எது?
**அன்னம்; ஹம்சவாஹினி**

57. சூரியனுக்கும் நீலாதேவிக்கும் பிறந்த மகான் யார்?
**சித்ரகுப்தன்**

58. அன்னை பார்வதி லிங்கத் திருமேனியுடன் காட்சியளிக்கும் தலங்கள் யாவை?
**கட்டீல், கொல்லூர், நைமிசாரண்யம்**

59. ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜகோபுரத்தைக் கட்டிய மன்னன் யார்?
**வல்லவ தேவ பாண்டியன்**

60. அக்னி நட்சத்திரம் எப்போது தொடங்கி எப்போது முடியும்?
**சித்திரை 21 முதல் வைகாசி 14 வரை**

61. திருமால் மீது பள்ளியெழுச்சி பாடியவர் யார்?
**தொண்டரடிப் பொடியாழ்வார்.**

62. சீதையின் தந்தை பெயர் ஜனகர் தாய் பெயர் என்ன?
**சுனை நா**

63. அசுரர்களின் குரு சுக்கிராச்சாரியார். அவரது மனைவி பெயர் என்ன?
**சுகீர்த்தி**

64. சூரியன் உதித்ததும் இருள் அகலுகிறது. அதுபோல் அவதார புருஷர்கள் தோன்றியதும் ..........?
**நாடே பேறு பெற்று புனிதம் அடைகிறது.**

65. எது பக்தி அல்ல?
**பணத்திற்காகவோ, உடல் நலத்திற்கோ பிரார்த்தனை செய்வது**

66. நமது சாத்திரங்கள் கூறும் ஐந்து வழிபாடுகள் யாவை?
**ரிஷி வழிபாடு, தேவ வழிபாடு, பித்ரு வழிபாடு, ந்ருவழிபாடு மற்றும் பூதயஜ்ஞம் வழிபாடு.**

67. மாணவனிடம் இருக்க வேண்டிய தகுதிகள் யாவை?
**பரிசுத்தம், அறிவொளி பெறுவதற்கு உண்மையான தாகம், விடாமுயற்சி**

68. முருகப் பெருமானின் மயில், பாம்பு இவை எவற்றின் சின்னம்?
**மயில் ஓங்காரத்தின் சின்னம், பாம்பு குண்டலினி சக்தியின் சின்னம்**

69. உபவேதங்கள் நான்கு அவை யாவை?
**ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்த சாஸ்திரம்.**

70. மன்னன் / தலைவன் – மாண்புகள் யாவை?
**கொடை, கருணை, நீதி, குடியோம்பல்**

71. கிருஷ்ண பரமாத்மா வேடனது அம்பினால் மகா சமாதி அடைந்தது எவ்விடம்?
**தேகோத்ஸர்க் – துவாரகையின் அருகே ப்ரபாஸ் தீர்த்தஸ்தானம்**

72. மீராபாய் எங்கு பிறந்தார்? பெற்றோர் பெயரென்ன?
**உதயப்பூர், ராஜாரத்னசிங், சந்திரமுகி**

73. ரமணமகரிஷி எங்கு பிறந்தார்? பெற்றோர் பெயரென்ன?
**திருச்சுழி, சுந்தரம் அய்யர், அழகம்மை**

74. அகல்யாபாய் – தந்தை பெயரென்ன? கணவன் பெயரென்ன?
**மாங்கோஜி சிந்தி, காந்திராவ்**

75. பஞ்ச பிராணன்கள் யாவை?
**ப்ராணன், அபானன், உதானன், வ்யானன், சமானன்**

76. சிவ வழிபாட்டை திருமூலர் எவ்வாறு கூறுகிறார்?
**தெள்வத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**

77. சிவனின் தட்சிணா மூர்த்தி வடிவம் சங்க இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?
**ஆலமர் செல்வன்**

78. குமார தந்திரம் என்னும் நூலில் முருகன் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
**கஜவாஹனசுவாமி**

79. மகாபாரத சகுனிக்கு எங்கு கோயில் உள்ளது?
**கேரளா – கொட்டாரக்கரா அருகே பவித்ரீஸ்வரம்**

80. சிவனின் ருத்ர தாண்டவத்தின் பார்வதியின் வயிறு பகுதி விழுந்த இடத்தின் பெயர் என்ன? எங்குள்ளது?
**அட்டகாசம் – மேற்கு வங்கத்தில் பிரத்யும்னம் சிருங்களாதேவி கோயில்**

81. தனிஷ்டா பஞ்சகம் (அடைப்புக் காலம்) என்றால் என்ன?
**அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களுக்கு தனிஷ்டா பஞ்சகம் என்று பெயர்.**

82. விநாயகர் மீது வள்ளலார் பாடிய பாட்டு எது?
**சித்தி விநாயக வள்ளல் துதி**

83. வள்ளி, தெய்வானை முற்பிறவியில் யாருடைய மகள்கள் – என்ன பெயர்?
**திருமாலின் மகள்கள், அமுதவல்லி, சுந்தரவல்லி**

84. தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை கடைந்த போது வெளிப்பட்ட ஐந்து பசுக்கள் யாவை?
**நந்தா, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை**



85. மேலாடையின்றி 'திருவாழ்மார்பன்' என்ற பெயரில் பெருமாள் தரிசனம் தரும் தலம் எது? (இது 108 திவ்ய தேசங்களுள் ஒன்று)
**கேரளாவில் பத்தனம் திட்டை மாவட்டத்தில் உள்ள திருவில்லா**

86. கணபதி சிலையின் மடியில் கண்ணன். எந்தக் கோயிலில்
**கேரள நாட்டில் மள்ளியூர்க் கோயிலில்**

87. திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதியை 5 கோலங்களில் தரிசிக்கலாம் யாவை?
**வேங்கடகிருஷ்ணர், நரசிம்மர், ராமர், கஜேந்திர வரதர், ரங்கநாதர்.**

88. சூரிய குலத்தில் உதித்த தலை சிறந்த மன்னர்கள் நால்வரைக் கூறு
**அரிச்சந்திரன், நளன், ஸ்ரீராமர், கர்ணன்**

89. தவம் என்றால் என்ன? ஜபம் என்றால் என்ன?
**எல்லையின்றி தியானிப்பது தவம். தவத்தின் முந்தைய நிலை ஜபம்**

90. 'வேலை வணங்குவதே வேலை' என்று பாடியவர் யார்?
**சைவ எல்லப்ப நாவலர் – செவ்வந்தி புராணம்**

91. திருநீறை – திருமந்திரம் எவ்வாறு குறிப்பிடுகிறது?
**கங்காளன் பூசும் கவசத்திருநீறு**

92. தீட்சை இருவகைப்படும். அவை யாவை?
**நிராதாரம், சாதாரம்.**

93. ஓம் என்னும் பிரணவம் இருவகைப்படும் அவை யாவை?
**தொகுத்து சொல்வது சமஷ்டி, பிரித்து சொல்வது வியஷ்டி.**

94. வள்ளலார் இறைவனை எவ்வாறு அழைத்தார்?
**அருள் விளக்கே! அருட்சுடரே! அருட்ஜோதியே!**

95. பூசத்திற்கு தேவதை யார்? புனர்பூசத்திற்கு தேவதை யார்?
**முறையே பிருஹஸ்பதி, அதிதி**

96. 1300 ஆண்டுகளுக்கு முன்பே தைப்பூசம் கொண்டாடப்பட்டது. இதை எந்த நூலில் காணலாம்?
**திருமயிலை தேவார பதிகம்**

97. ஆலிலையில் பள்ளி கொண்ட பரந்தாமனுக்கு என்ன பெயர்?
**வடபத்ர சாயி**

98. சிவராத்திரியன்று காய்களை உருட்டி விளையாடுவதற்கு ஒரு படத்தை உபயோகிப்பர் என்ன பெயர்?
**பரமபத சோபன படம்**

99. ஆன்மீக வாழ்க்கையில் மனித உடலை மூவகைகளாக பிரிப்பர். அவை யாவை?
**கட்டை, பஞ்சு, கற்பூரம்**

100. வைணவர்களுக்குரிய முக்கிய மூன்று தலங்கள் யாவை?
**ஸ்ரீ ரங்கம், திருப்பதி, காஞ்சிபுரம் (அத்திகிரிவரதர்)**

101. பாண்டவ தூதராக சென்ற பெருமாள் வீற்றிருக்கும் தலம் எது?
**திருப்பாடகம்**

102. பூரி ஜெகன்னாதர் கோயிலுக்குரிய வேறு பெயர்கள் சில கூறு
**மார்த்திய வைகுண்டம், சங்க க்ஷேத்ரம், நீலாத்திரி**

103. சமணமன்னன் விஷ்ணுவர்தன் பேலூரில் கட்டிய வைணவ கோயில் எது?
**விஜய நாராயணசுவாமி ஆலயம்**

104. திருவனந்தபுரம் – கொல்லம் மார்க்கத்தில் உள்ள பிரபலமான வைணவக் கோயில் எங்குள்ளது?
**வற்கலா**

105. பத்ராசலம் கோயில் உருவாக காரணமான பக்தை யார்?
**பாசலா தாமக்கா**

106. நந்தி தேவர் சாபம் நீங்க பூஜித்த தலம் எது?
**நந்திபுர விண்ணகரம்**

107. அவந்தி - உஜ்ஜயினியில் பாயும் புண்ணிய நதி எது?
**சிப்ரா**

108. அன்னைக்கு சிரார்த்தம் செய்து பிண்டம் வைக்கும் தலம் எது?
**மாத்ருகயா – சித்பூர் (டில்லி, பம்பாய், அகமதாபாத் மார்க்கத்தில்)**

109. தேவப்ரயாகையில் சங்கமமாகும் நதிகள் யாவை?
**அலக்நந்தா, பாகீரதி**

110. சீர்காழி, தலை ஞாயிறு – முன்னாள் பெயரென்ன?
**திருப்பிரம்மபுரம், திருக்கருப்பறியலூர்**

111. மதுரை, வேதாரண்யம் – முன்னாள் பெயரென்ன?
**திரு ஆலவாய், திருமறைக்காடு**

112. அவினாசி, திருக்கைலாயம், ஆச்சாள்புரம் – முன்னாள் பெயரென்ன?
**திருப்புக் கொளியூர், திருநொடித்தான் மலை, திருநல்லூர் பெருமணம்**

113. ஞான கண்டத்தை எவ்வாறு குறிப்பிடுகிறோம்?
**உபநிடதங்கள்**



114. அவற்றுள் நான்கினைக் கூறு
**1) ஈசாவாஸ்யம், 2) மாண்டூக்கியம், 3) சாந்தோக்யம், 4) பிருஹதாரண்யகம்**

115. உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை இந்த மூன்று நூல்களையும் எவ்வாறு அழைப்பர்?
**பிரஸ்தானத் திரயம்**

116. சிக்கனமாய் இரு. ஆனால் .................................. **கஞ்சனாய் இராதே!**
வீரனாய் இரு. ஆனால் .................................. **போக்கிரியாய் இராதே!**
சுறுசுறுப்பாய் இரு. ஆனால் .................................. **பதட்டப் படாதே!**

117. தர்மம் செய். ஆனால் .................................. **ஆண்டியாகி விடாதே!**
பொருளைத் தேடு ஆனால் .................................. **பேராசைப்படாதே!**
உழைப்பை நம்பு. ஆனால் .................................. **இறைவனை மறவாதே!**

118. இறைவன் நடராஜரின் வடிவம் என்ன?
**வலது காலை ஊன்றி, இடது காலை தூக்கி, ஒரு கையில் உடுக்கை, மற்றொரு கையில் அக்னி, மூன்றாவது கை தூக்கிய பாதத்தை காண்பிக்க, நான்காவது கை அபயம் அளிக்கிறது.**

119. திருக்கோயிலில் உள்ள தெய்வ உருவங்களை வைணவர் எவ்வாறு அழைப்பர்?
**அர்ச்சை**

120. கோயில் கட்டும் முறையை விளக்கும் நூல் எது?
**காமிகாகமம், காரணாகமம்**

121. விஷ்ணு கோயில் கட்டும் முறையை விளக்கும் நூல்கள் எவை?
**பஞ்சராத்ரம், வைகானஸம்.**

122. தமிழகத்தில் அன்னசத்திரங்கள், கேரளத்தில் என்ன பெயர்?
**ஊட்டுப் பிறைகள்**

123. சின் முத்திரை மூன்று வகைப்படும். அவை யாவை?
**சாதக சின்முத்திரை, சாத்ய சின் முத்திரை, போதக சின் முத்திரை**

124. அம்பிகை வழிபாட்டிற்குரிய சிறந்த நாட்கள் எவை?
**வெள்ளிக்கிழமை, பவுர்ணமி, வஸந்த நவராத்திரி, சாரத நவராத்திரி**

125. கோயில்கள் நமது உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு என்ன பெயர்?
**க்ஷேத்திரம் சரீர பிரஸ்தாரம்**

126. கோயிலினுள் இருக்கும் 3 பிரகாரங்கள் எதை உணர்த்துகின்றன?
**அன்ன மயம், பிராண மயம், மனோ மயம்**

127. நமது முதுகுத் தண்டினில் அமைந்துள்ள மூன்று நாடிகள் யாவை?
**இடா, பிங்கலா, சுஷீம்னா**

128. கோயில் பலி பீடத்தை வணங்கி நாம் எதை பலி கொடுக்க வேண்டும்?
**காம, குரோத, லோப, மோக, மதமாச்சர்யங்கள்**

129. நந்தியின் உருவம் உணர்த்தும் நான்கு ஆத்மகுணங்கள் யாவை?
**சமம், விசாரம், சந்தோஷம், சாது சங்கம்**

130. லிங்கம் என்ற சொல்லின் பொருளென்ன?
**ஆன்மாவும், உலகமும் ஒடுங்குவதற்கும், தோன்றுவதற்குமான இடம்**

131. எவற்றால் லிங்கம் உருவாக்கப்படலாம்?
**மஞ்சள், சந்தனம், பொன், வெள்ளி, மண், சாதம், வெண்ணெய்**

132. நடராஜரின் நாட்டியத்திற்கு என்ன பெயர்?
**பஞ்ச கிருத்ய பரமானந்த தாண்டவம்**

133. சரஸ்வதி, நாரதர், தும்புரு ஆகியவர்களின் கரங்களில் உள்ள வீணைக்கு என்ன பெயர்?
**விபஞ்சி (கச்சபி), மகதி, கலாவதி**

134. புராணம் என்பது யாது?
**பூர்வத்தில் நடந்ததை சொல்பவை புராணங்கள்**

135. விஷ்ணு புராணத்தை செய்தவர் யார்?
**வியாச மகரிஷியின் தந்தை பராசுரர்**

136. இந்து தர்மத்திற்கு ஆதாரமாக கூறப்படும் நூல்கள் எத்தனை?
**14 பிரமாண நூல்கள், பிரதானமானவை ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்கள்.**

137. சித்திரையை மேஷ மாதம் என்கிறோம். ஆவணி, புரட்டாசி, ஐப்பசி......?
**முறையே சிம்ம, கன்யா, துலா மாதம்.**

138. கைத்தல நிறைகனி ........... பாடியவர் யார்? எங்கே?
**அருணகிரி நாதர், வயலூரில் பொய்யா கணபதி சந்நிதியில்**

139. சங்கடஹர சதுர்த்தி – பொருள் என்ன? எப்போது கொண்டப்படுகிறது?
**துன்பங்களை போக்கும். ஒவ்வொரு மாதமும் கிருஷ்ணபட்சத்தன்று**

140. எழுவகை பிறப்புகள் யாவை?
**தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீரில் வாழ்வன, தாவரம்**



141. ஆறு கால பூஜை என்பது யாது?
**காலை சந்தி, த்வீதிய காலம், உச்சி காலம், சாயங்காலம், ராத்திரி சந்தி, அர்த்த சாமம்.**

142. 3, 5, 7 நாட்களுக்கு கொண்டாடப்படும் உற்சவங்களுக்கு என்ன பெயர்?
**சாத்விகம், பார்த்திவம், ஶ்ரீகரம்**

143. திருவண்ணாமலையில் மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் யாவை?
**திருவெம்பாவை**

144. திருப்போரூர் பெருமையை கூறும் நூல் எது?
**கந்தர் கழலணி விண்ணப்ப மாலை – திருமயிலை ராகவதாசர்**

145. ராஜ்யம் என்றால் என்ன?
**ராஜா, மந்திரி, நேசநாடுகள், கஜானா, குடிமக்கள், கோட்டை, ராணுவம்.**

146. தாழம்பூ சிவபெருமானுக்கு என்று அர்ச்சிக்கப்படுகிறது?
**மகாசிவராத்திரி இரண்டாவது கால பூஜை**

147. எந்தவிதமான புனித நூலும் இல்லாத மதம் எது?
**ஷிண்டோ மதம் – ஜப்பான்.**

148. தமிழ் வேதம் என்று சொல்லப்படும் நூல் எது?
**திருமந்திரம்.**

149. வேதாந்த தேசிகர் ராமானுஜர் மீது பாடிய நூல் எது?
**யதிராஜ சப்தமி**

150. வேதங்களை 'ஸ்ருதி' என்று அழைப்பது ஏன்?
**எழுதிப் படிக்காமல், காதால் கேட்டு மனப்பாடம் செய்வதால்**

151. சரஸ்வதிக்குரிய திதி எது? நட்சத்திரம் எது?
**திதி – நவமி, நட்சத்திரம் – மூலம்**

152. திருவையாறு அம்பிகையின் பெயர் என்ன?
**அறம் வளர்த்த நாயகி**

153. விஷ்ணுவுக்குரிய சாளகிராமக்கல் எந்த நதியில் கிடைக்கிறது?
**கண்டகி நதி – நேபாளம்**

154. ஹரிவராஸனம் என்ற பிரபலமான பாடலை இயற்றியவர் யார்?
**கம்பக்குடி களத்தூர் அய்யர்**

155. நன்னூல் ஆசிரியர் பெயரென்ன?
**பவனந்தி முனிவர்**

156. புத்திர காமேஷ்டி யாகத்தை செய்தவர் யார்?
**ரிஷ்ய சிருங்கர்**

157. ருத்திராட்ச மகிமை பற்றி கூறும் நூல் எது?
**ருத்திராட்ச ஜாபாலோப நிஷத்**

158. அன்னதானம் செய்வதற்கு என்ன பெயர்?
**சமாராதனை**

159. கிருஷ்ணரால் சுயரூபம் பெற்ற குபேரனின் மகன்கள் யார்?
**நளகூவரன், மணிக்ரீவன்**

160. அம்பாளுக்கு கீழ்க்கண்ட மாநிலங்களில் உள்ள பெயர் என்ன?
**அஸ்ஸாம் - காமாக்யா, மகாராஷ்டிரா - துலஜா பவானி குஜராத் - அம்பாஜி, உத்தரப்பிரதேசம் - விந்தியா வாசினி**

161. மாமன்னர் நாபிக்கும் மேருதேவிக்கும் மகனாக அவதரித்த விஷ்ணு அவதாரத்தின் பெயர் என்ன?
**ரிஷபதேவர்**

162. மரணத் தருவாயில் நாராயண நாமத்தை உச்சரித்ததால் எமதூதர்களிடமிருந்து காப்பாற்றப்பட்ட நபர் யார்?
**அஜாமிளன்**

163. கும்பாபிஷேக கலசத்தில் போடப்படும் புனித இலைகள் யாவை?
**மாவிலை, துளசி, வில்வம், வேம்பு, அருகம்புல், தர்பை**

164. கோயில்களில் மூலவரை அடிக்கடி வெளியே எடுப்பதில்லை ஏன்?
**மூலவரை அடிக்கடி வெளியே எடுத்தால் கருவறையில் இணைக்கப்பட்ட மந்திர சக்தி குறையும்.**

165. வில்வத்தின் சிறப்பு என்ன?
**பித்த மயக்கம், வாய் குழறுதல் ஆகியவற்றை போக்க வல்லது.**

166. ருத்ராட்சத்தின் மகிமை என்ன?
**நரம்பு பலம், இதய பலம், சுவாச சீரமைப்பு, நோய் எதிர்ப்பு சக்தி.**

167. ஒரு வருடத்திற்கு துல்லியமாக எத்தனை நாட்கள் என்று சூரிய சித்தாந்தம் கூறுகிறது?
**365. 258756 நாட்கள்**

168. புவி ஈர்ப்பு சக்தி, கோள்களின் நிலை பற்றி பாஸ்கராச்சாரியார் எழுதிய நூல்கள் யாவை?
**சூரிய சித்தாந்தம், சித்தாந்த சிரோமணி**

169. கோபியர்கள் பகவானை மனமருகி துதித்த கீதங்கள் யாவை?
**கோபிகாகீதம், யுகளகீதம், ப்ரமர கீதம்**

170. தத்தாத்ரேயரின் பெற்றோர் யாவர்?
**அத்ரிமகரிஷி அனசூயை**

171. கல்கி அவதாரத்தில் யாருடைய பிள்ளையாக கிருஷ்ண பகவான் அவதரிப்பார்?
**விஷ்ணுயசஸ்**

172. பொதுவாக ஒரு பொருள் மீது வைக்கின்ற ஆசைக்கு என்ன பெயர்?
**காமம், இதன் விளைவு கோபம், இதன் விளைவு மயக்கம்**

173. அக்னியின் விளக்கம் என்ன?
**நெருப்பு - சிவபெருமான், நெருப்பில் உள்ள சூடு - அம்பிகை நெருப்பில் உள்ள செம்மை நிறம் - விநாயகர். நெருப்பில் உள்ள ஒளி - முருகவேள்.**

174. நம் நாட்டிற்கு பெரும்புகழை விளைவிப்பவர் மூவர். அவர் யாவர்?
**கற்புடை மாதர்கள், பக்தர்கள், ஞானியர்.**

175. பக்தி நெறிக்கு ................ கண்ணப்பர், யோக நெறிக்கு, சன்மார்க்க நெறிக்கு யார்?
**யோக நெறிக்கு பெருமிழலைக்குறும்பர், திருமூலர். சன்மார்க்கத்திற்கு மணிவாசகர்.**

176. மூதாதையர்க்கு செய்யும் கிரியைகளை விளக்கும் நூல் எது?
**சிவதர்மோத்திரம், கருட புராணம்**

177. முருகப்பெருமானின் சேனாதிபதிகள் நால்வரை கூறுக.
**சுப்ரன், மேகமாலி, மங்களகேசன், மதங்கன்**

178. திருமயிலையில் அவதரித்தவர்கள் யாவர்?
**திருவள்ளுவர், வாயிலார் நாயனார், பேயாழ்வார்**

179. கங்கையில் நீராடும் 64 கட்டங்களில் நான்கினைக் கூறு
**மணிகர்ணிகா, வருணசங்கம், பஞ்சகங்கா, தச அசுவமேத கட்டம்.**

180. காஞ்சி காமாட்சி ஆலயத்தில் உள்ள ஐந்து காமாட்சிகள் யாவர்?
**ஸ்ரீ காமகோடி காமாட்சி, தபாஸ் காமாட்சி, சொர்ணகாமாட்சி, அஞ்சன காமாட்சி, உற்சவர் காமாட்சி.**

181. திருமறைக்காடு (வேதாரண்யம்) ஈசுவரியின் திருநாமம் என்ன?
**யாழைப் பழித்த மொழியாள்.**

182. நெல்லையப்பர் ஆலயத்தை நிர்மாணித்த மன்னன் யார்?
**"நிறைகொண்ட சிந்தையன் நெல்வேலி வென்ற சீர்நெடுமாறன்"**

183. மாங்காடு தலத்தின் மற்ற பெயர்கள் யாவை?
**ஆமராண்யம், மாவை**

184. மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள ஏழு புண்ணிய தலங்களுள் கொல்லூர் மூகாம்பிகை ஒன்று. மற்றவற்றில் ஏதேனும் மூன்றினைக் கூறு.
**ரஜத பீடம் - உடுப்பி, கோகர்ணா - மகாலேஷ்வர், குமாரத்தி - சுப்ரமண்யா**

185. மந்திர ரத்னம் என போற்றப்படுவது எது?
**சுந்தர காண்டம்**

186. பரத்வாஜ முனிவர், போஜராஜன் எழுதிய நூல்கள் எவை?
**வைமாணிக சாஸ்திரம், சமராங்க சூத்திரம்**

187. இன்பத்தையும், துன்பத்தையும் ஒன்றாக பாவித்தலுக்கு என்ன பெயர்
**இருவினையொப்பு.**

188. பீமனும், துரியோதனனும் தனித்து சண்டையிட்ட இடம் எது?
**சமந்த பஞ்சகம் என்ற புண்ணிய பூமி**

189. கருவூராரின் பாடல்கள் உள்ள நூல் எது?
**திருவிசைப்பா**

190. கோயில் பிரகாரத்தை எப்போது சுற்றக் கூடாது?
**அபிஷேகம் நடக்கும் போது, திரையிட்டிருக்கும் போது, விளக்கேற்றாமல் இருக்கும் போது.**

191. துர்க்கைக்கு எப்போது விளக்கேற்ற வேண்டும்?
**ராகு தோஷம் நீங்க ராகு காலத்தில்**

192. சைவ வைணவர்களை ஒருங்கிணைக்கும் லட்சியம் கொண்ட நூல் எது?
**முக்கூடற்பள்ளு**

193. ஆதிசேஷன் வழிபட்ட தலங்கள் யாவை?
**திருப்பாம்பரம், நாகப்பட்டினம், திருநாகேஸ்வரம்**

194. வைணவ தலங்களின் அமைவிடங்கள் கூறு
**1. தொட்ட மல்லூர் - கர்நாடகம்**
**2. திருவாறான் விளை - கேரளம்**
**3. யாதகிரிகுட்டா - ஆந்திரம்**
**4. திருத்தெற்றியம்பலம் - தமிழ்நாடு.**

195. சப்த மாதாக்களில் நால்வரைக் கூறு
**ப்ராஹ்மி, வாராகி, இந்திராணி, சாமுண்டி**

196. மூன்று ஜகந்நாதம் யாவை?
**1. பூரி, 2. திருப்புல்லாணி, 3. திருமழிசை**

197. அறவாழ்க்கைக்கு வழிகாட்டிய சித்தர்களுள் மூவரைக் கூறு
**தன்வந்திரி - வைத்தீஸ்வரன் கோயில், கமலமுனி - திருவாரூர், குதம்பைச் சித்தர் - மாயவரம்**

198. திருநெல்வேலியை சுற்றியுள்ள நவக்கிரக தலங்களில் மூன்று கூறு
**சேர்ந்த பூ மங்கலம், முறப்பநாடு, கோடக நல்லூர்**

199. படிப்புக்கு வணங்க வேண்டிய தலம் எது?
**எழுத்தறிநாதேஸ்வரர் ஆலயம், தஞ்சை மாவட்டம் புளியஞ்சேரி அருகே**

200. வேலை வாய்ப்புக்கு வணங்க வேண்டிய தலம் எது?
**திருநறையூர் நாச்சியார் கோயில்**

* * * * *



# பகுதி – 2

**(9,10,11,12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும்)**

## 1. ஜொராவர்சிங், பதே சிங்

நம் தேசத்தையும், சமயத்தையும் பாதுகாப்பதற்காக தங்கள் உயிரையே தியாகம் செய்தவர்களில் சீக்கியர்கள் முக்கியமானவர்கள். அந்த வம்சத்தில் மாவீரரான தேஜ் பகதூரின் மகன் குரு கோவிந்த சிங் அவருடைய அருந்தவப்புதல்வர்கள் ஜொராவர் சிங் மற்றும் பதேசிங் அவர்கள் இருவரும் வீரர்களாகவும், மதப்பற்றும், தேசப்பற்றும் மிக்கவர்களாக வளர்ந்து வந்தனர். இந்துக்கள் மீது தீராப்பகை கொண்ட மன்னன் அவரங்கசீப் அந்த சிறுவர்களை அழைத்து முஸ்லீம் மதத்தில் சேர்ந்து விடும்படி வற்புத்தினான். ஆனால் சிறுவர்கள் நாங்கள் இந்துவாகவே பிறந்தோம்; இந்துவாகவே இருப்போம். மதம் மாற மாட்டோம் என்று கூறினார். வெறுப்பும், கோபமுமடைந்த ஔரங்க சீப் அவர்களை நிற்க வைத்து செங்கல் சுவரெழுப்ப கட்டளையிட்டான். உறுதியாயிருந்த சிறுவர்கள் "உங்கள் பணத்திற்காகவும், பதவிக்காகவும் மதத்தை விலை பேசும் நீசர்களல்லர் நாங்கள்" என்று கூறினார். சுற்றிலும் சுவர் எழுந்தது. அப்போது அண்ணன் அழுவதைக் கண்ட இளையவன் "ஏன் கோழைபோல் அழுகிறாய்?" என்று கேட்டான். அதற்கு அண்ணன் "எனக்குப் பின் பிறந்த உனக்கன்றோ இந்து மதத்திற்காக உயிர் துறக்கும் பாக்கியம் முதலில் கிடைத்துள்ளது என்று எண்ணியே கண்ணீர் வடித்தேன்" என்று கூறினான். நினைக்கும் போதே மயிர்க் கூச்செறியும் தியாகம் செய்த அந்த வீரப்புதல்வர்கள் என்றும் மங்காப் புகழுடன் நம் நெஞ்சில் வீற்றிருப்பார்கள்.

## 2. மெய்கண்ட தேவர்

தமிழகத்தில் திருப்பெண்ணாகடம் என்னும் ஊரில் அச்சுத களப்பாளர் என்னும் சைவ வேளாளர் ஒருவர் வாழ்ந்து வந்தார். பிள்ளைப் பேறு இல்லாத அவரை அவரது குல குருவாகிய சகலாகம பண்டிதர் திருவெண்காடு சென்று முக்குளம் நீராடி தவமிருக்க ஆணையிட்டார். "உனக்கு ஒரு ஞானக்குழந்தை பிறப்பான்" என்று கனவில் இறையருள் கிட்டியது. அவ்வண்ணமே பிறந்த குழந்தைக்கு சுவேதவனப் பெருமாள் என திருநாமம் சூட்டினர். சில நாள் கழித்து திருவெண்ணெய் நல்லூரில் வசித்து வந்த அவரது மாமன் தன் இல்லத்துக்கு எடுத்துச் சென்று வளர்த்து வந்தார். இரண்டு வயது பூர்த்தியானதும் சுவேதவனப் பெருமாள் மெய்யுணர்வு பெற்றார். பரஞ்சோதி முனிவர் என்னும் ஆச்சாரியார் திருக்கயிலாய மலையிலிருந்து வந்து குழந்தைக்கு சிவஞானபோத சூத்திரங்களை தமிழில் மொழிபெயர்த்து பொழிப்புரையும் செய்யுமாறு கட்டளையிட்டு சென்றார். குழந்தைக்கு

மெய்கண்ட தேவர் என்னும் சிறப்பு பெயரையும் சூட்டினார். பின்னர் ஸ்ரீ மெய் கண்ட தேவர், அந்த தலத்தில் எழுந்தருளியிருக்கும் சுயம்பு மூர்த்தியாகிய பொல்லாப் பிள்ளையாரின் சன்னிதியில் வழிபட்டு சிவஞான போதத்தை தமிழில் பன்னிரெண்டு சூத்திரங்களாக மொழி பெயர்த்தார். பலருக்கும் அதை உபதேசித்தார்.

சில காலம் கழித்து சகலாகம பண்டிதர் அவ்வூருக்கு வந்த போது குலகுருவை குழந்தை வணங்கவில்லை. குழந்தை சீடர்களுக்கு ஆணவ மலத்தைப் பற்றிய பாடத்தை நடத்திக் கொண்டிருந்தார். ஆணவ மலத்தின் இலக்கணம் என்ன என்று குருநாதர் வினவ, மெய் கண்ட தேவர் கருணை நோக்குடன் தமது சுட்டு விரலால் கேள்வி கேட்ட பண்டிதரையே சுட்டிக் காட்டினார். பண்டிதரது 'நான்' என்ற ஆணவம் கரைந்தது குழந்தையின் திருவடியில் வீழ்ந்து வணங்கினார். மெய்கண்ட தேவர் அந்த பண்டிதருக்கு அருணந்தி என்னும் தீட்சா நாமம் சூட்டி அவரை தன் முதல் சீடராக ஏற்றுக் கொண்டார். இவ்வாறு சிவயோகத்தில் அமர்ந்து மெய்கண்ட தேவர் திருவெண்ணெய் நல்லூரியிலேயே ஐப்பசி மாதம் சுவாதி நட்சத்திரத்தன்று சிவபெருமான் திருவடியில் இரண்டறக் கலந்தார். இவரது காலம் இன்றைக்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னதாகும்.

**3. மகாபாரதம்**

குருவம்சத்தில் பிறந்த சந்தனு மன்னனுக்கும், வானுலக மங்கை கங்காதேவிக்கும் பிறந்தவர் பீஷ்மர். சந்தனு இரண்டாம் தாரமாக சத்தியவதி என்னும் மீனவப் பெண்ணை மணம் செய்து கொண்டார். சித்ராங்கதன், விசித்திர வீரியன் இருவரும் சத்தியவதிக்கு மக்களாய்ப் பிறந்தார்கள். விசித்திரவீரியன் அம்பிகை, அம்பாலிகை என் என்ற இரு பெண்களை மணம் புரிந்தார். ஆனால் குழந்தை இல்லாமலேயே இறந்து போனார். வேதவியாசர் அம்பிகை, அம்பாலிகை இவர்களை ஏற்றுக் கொண்டதனால் திருதராஷ்டிரனும், பாண்டுவும் மக்களாய் பிறந்தார்கள். பீஷ்மர், திருதராஷ்டிரனுக்கு காந்தார தேசத்து அரசகுமாரியாகிய காந்தாரியை மணம் புரிவித்தார். பாண்டு, போஜனின் மகளாகிய குந்தியை மணம் புரிந்தார். குந்திக்கு திருமணமாகுமுன்னர், சூரிய தேவனருளால் கர்ணன் பிறந்திருந்தான். மற்றைய தேவர்களின் அருளால் தருமன், பீமன், அர்ச்சனன் என்ற மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தனர். பாண்டுவின் இரண்டாவது மனைவி மாத்ரிக்கு நகுலன், சகாதேவன் என்ற இரு ஆண் குழந்தைகள் பிறந்தனர். காந்தாரிக்கு துரியோதனன் முதலான நூறு ஆண் குழந்தைகளும், துச்சலை என்ற பெண் குழந்தையும் பிறந்தனர்.

துரோணாச்சாரியார் இரு சாராருக்கும் வில்வித்தைகள் கற்றுக்கொடுத்தார். கர்ணனுடைய திறமையறிந்து துரியோதனன் அவனை



அங்கதேசத்து அரசனாக்கினான். பொறாமை குணம் கொண்ட துரியோதனன் சூழ்ச்சி செய்து பஞ்ச பாண்டவர்களை வாரணாவதம் என்ற நாட்டிற்கு அனுப்பினான். ஆனால் பஞ்சபாண்டவர்களும், குந்தியும் தப்பித்து ஏக சக்கரம் என்ற நகரில் வாழ்ந்தார்கள்.

துருபதனுடைய மகள் திரௌபதியின் சுயம் வரத்தில் நடைபெற்ற போட்டியில் அர்ச்சுனன் வெற்றி பெற்று அவளை மணந்து கொண்டான். குந்தியின் வாக்குப்படி ஐவருக்கும் மனைவியாக திரௌபதி வாழ்ந்தாள்.

பாண்டவர்கள் உயிருடன் இருப்பதை அறிந்த கௌரவர்கள் அவர்கள் மீது படையெடுத்து தோற்றுப் போயினர். பின்னர் பீஷ்மர் முதலானோரின் ஆலோசனைப்படி, பாண்டவர்களை காண்டவ பிரஸ்தம் என்ற நாட்டுக்கு அதிபதியாக்கினர். பின்னர் இது இந்திர்பிரஸ்தமாக மாறியது.

எனினும் பொறாமை கொண்ட கௌரவர்கள் தருமரை அழைத்து கள்ள சூதாடினார்கள். சூதாட்டத்தில் நாடு, உடைமை அனைத்தையும் தருமர் இழந்தார். அரசவையில் பாஞ்சாலியை துச்சாதனன் துகிலுரிய கண்ணன் அருளால் அவள் காப்பாற்றப்பட்டாள். சூதாட்டத்தின் காரணமாக பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாத வாசமும் மேற்கொள்ள நேர்ந்தது. வனத்தில் வாழும்போது, சூரிய பகவான் அருளால் அட்சய பாத்திரம் கிடைத்தது. அர்ச்சுனன் தவமிருந்து பாசுபத அஸ்திரம் பெற்றான். மேலும் தேவர்களுடைய அருளாசியும் கிடைத்தது. வனவாசமும், அஞ்ஞாத வாசமும் செவ்வனே முடிந்ததும், கௌரவர்களிடம் தங்கள் நாடான இந்திரப் பிரஸ்தத்தை திருப்பித் தருமாறு பாண்டவர்கள் கேட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் தூது சென்ற பின்னரும் துரியோதனன், பஞ்ச பாண்டவர்களுக்கு ஊசி குத்தும் இடம் கூட தர மறுத்து விட்டான்.

கடைசியாக இருதரப்பாருக்கும் பாரதப்போர் மூண்டது. போரில் கிருஷ்ணபகவானது அருளால் பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். தர்மர் அஸ்தினாபுரத்திற்கு மன்னரானார்.

துவாரகையில் அரசாண்டு கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணரது குலத்தினராகிய விருஷ்ணிகள் யாவரும் அகந்தைமிகுந்தவராய், ரிஷிகளை கேலி செய்யவே, அவர்கள் சாபத்தால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மடிந்தனர். கிருஷ்ண பகவானும் மகா சமாதி அடைந்தார்.

சில ஆண்டுகளில் துருதராஷ்டிரனும், காந்தாரியும் குந்தி தேவியும் தவ வாழ்வு மேற்கொண்டு கானகமேகினர். பின் காட்டுத் தீயில் வெந்து மடிந்தனர். அபிமன்யுவின் மகனாகிய பரீட்சித்துக்கு முடி சூட்டி, தருமரும், தம்பியரும் கானகம் சென்று, தீர்த்தயாத்திரை மேற்கொண்டு அழிவிலா சொர்க்க பதவி அடைந்தனர்.

## 4. திலகவதியார்

தமிழகத்தில் திருமுனைப்பாடி நாட்டில், திருவாமூரில் சைவ வேளாளர் மரபில், புகழனார் என்ற புண்ணியர் தனது மனைவியாகிய மாதினியார் என்ற கற்புக்கரசியுடன் இல்லறம் நடத்தி வந்தார். அவர்களுக்கு திலகவதி என்ற பெண் குழந்தை பிறந்தது. சில ஆண்டுகளுக்கு பின்னர் மருள் நீக்கியார் என்ற ஆண் மகவு பிறந்தது. திலகவதிக்கு பன்னிரண்டு வயது வந்ததும் பெற்றோர் சிவபக்தியில் சிறந்த கலிப்பகை என்பவருக்கு அவரை திருமணம் முடித்தனர். கலிப்பகை அரசனது படைத் தலைவராயிருந்தார். வடநாட்டுக்கு போர் புரிய செல்க என்று அரசன் ஆணையிட கலிப்பகை புறப்பட்டு சென்றார். இந்த சமயத்தில் திலகவதியின் தந்தை காலமானார். தாயும் தன்னுயிரை போக்கிக் கொண்டார். பின்னர் கலித்தொகையும் போரில் வீர மரண மெய்தினார். அதனால் 'நான் இனி உயிர் வாழேன்' என எண்ணி திலகவதியார் உயிரை மாய்த்துக் கொள்ளச் சென்றார். அப்போது, தம்பியாகிய மருள் நீக்கியாரும் உயிர் விடத்துணிந்தார். இது கண்ட திலகவதியார், சிறுவனாயிருந்த தம்பியின் பொருட்டு உயிர் வாழ முடிவு செய்தார்.

மருள் நீக்கியார் துறவு நிலையை மேற்கொண்டு கடலூர் சென்று சமண சமயத்தை தழுவினார். சமய நூல்களில் வல்லவராகி தரும சேனர் என்னும் பெயருடன் சமண குருவாக விளங்கினார். திலகவதியாரும் திருவதிகை என்னும் தலத்தை அடைந்து தவவாழ்க்கை மேற்கொண்டார். சிவாலயத்தில் தொண்டு செய்து வந்தார். தம்பி நன்னெறியாகிய சிவநெறியை விட்டு சமண சமயம் சார்ந்ததற்கு அவர் பெரிதும் வருந்தினார். இதனை அவர் இறைவனிடம் முறையிட, இறைவனும் அவர் கனவில் தோன்றி, "நீ கவலைப்பட வேண்டாம். உம் தம்பிக்கு சூலைநோயைக் கொடுத்து நாமே ஆட்கொள்வோம்" என்று அருளினார். அதற்கிணங்க தரும சேனனுக்கு தனது தமக்கையை காண ஆவல் ஏற்பட்டது. உடனே திருவதிகைக்கு ஒருவரை அனுப்பினார்.

ஆனால் திலகவதியார் சிவநிந்தனை செய்பவர்கள் வாழும் இடத்திற்கு தாம் வருவதில்லை என மறுத்து விட்டார். இதனை அறிந்த தருமசேனர் அன்றிரவே திருவதிகைக்கு வந்து தமக்கையின் காலில் விழுந்தார். திலகவதியார் ஐந்தெழுத்து மந்திரம் ஓதி தம்பிக்கு திருநீறணிந்தார். அந்தக் கணமே வயிற்றுச்சூலை பறந்தோடியது. தருமசேனர் கூற்றாயினவாறு போன்ற எண்ணிலடங்கா பதிகங்களை பாடி திருநாவுக்கரசர் என்னும் சிறப்புப் பெற்று புதுவாழ்வுற்றார். திருநாவுக்கரசு சுவாமிகள் சைவ சமயாச்சாரியர்களுள் இரண்டாமராவார். திலகவதியார் மலரடி வாழ்க! அவர் புகழ் ஓங்குக!

*****